
# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol: 01 | Issue: 346 | 4 Pages | 8.7.2024 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர்: 01 | இதழ்: 346 | 4 பக்கங்கள் | 8.7.2024 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## 2ம் கட்டமாக நடந்த ஈரான் அதிபர் தேர்தல் பெசஸ்கியான் வெற்றி: ஒரு மாதத்திற்குள் பதவியேற்பு




துபாய், ஜூலை 8

ஈரானின் அதிபர் இப்ராகிம் ரைசி கடந்த ஜூன் 19ம் தேதி நடந்த ஹெலிகாப்டர் விபத்தில் உயிரிழந்தார். இதையடுத்து புதிய அதிபரை தேர்வு செய்வதற்கான தேர்தல் கடந்த மாதம் 28ம் தேதி நடந்தது. இதில் முன்னாள்நிதிஅமைச்சர்மசூத்பெசஸ்கியான் 42.5 சதவீத வாக்குகளும், 2ம் இடம் பெற்ற சையது ஜலீலி 38.6 சதவீத வாக்குகளும் பெற்றனர்.ஆனாலும்,ஈரான்அரசியலமைப்பு சட்டப்படி, வெற்றி வேட்பாளர் குறைந்தபட்சம் 50 சதவீத வாக்குகள் பெற வேண்டும். இதனால், முதல் 2 இடங்கள் பிடித்த பெசஸ்கியான் மற்றும் சையது ஜலீலி இடையே 2ம் கட்ட தேர்தல் நேற்று முன்தினம் நடந்தது.

இதில், பெசஸ்கியான் 1.63 கோடி வாக்குகளும், ஜலீலி 1.35 கோடி வாக்குகளும் பெற்றனர். இதன் மூலம், ஈரான் அதிபராக பெசஸ்கியான் வெற்றி பெற்றுள்ளார். அவர் அடுத்த ஒருமாதத்திற்குள் பதவியேற்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## கடந்த 24 மணி நேரத்தில் காசாவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் சிக்கி 5 பத்திரிக்கையாளர்கள் உள்பட 29 பேர் பலி



காசா, ஜூலை 8

காசாவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் கடந்த 24 மணி நேரத்தில் 5 பத்திரிக்கையாளர்கள் உள்பட 29 பேர் பலியாகியுள்ளனர். காசாவை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினரை முற்றிலும் ஒழிக்கும் நோக்கில் இஸ்ரேல் ராணுவம் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த தாக்குதல்களில் ஹமாஸ் அமைப்பினர் மட்டுமின்றி, ஆயிரக்கணக்கான பொதுமக்களும் கொல்லப்படுகின்றனர்.

சர்வதேச அளவில் இஸ்ரேலின் தாக்குதலுக்கு கண்டனங்கள் எழுந்த நிலையிலும், இஸ்ரேல் ராணுவம் தனது தாக்குதலை தொடர்ந்து வருகிறது. அந்த வகையில் காசா முனையில் கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேல் ராணுவம் நடத்திய தாக்குதலில் 29 பேர் பலியாகி உள்ளதாக காசா சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. இவர்களில் 5 பேர் பத்திரிகையாளர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் கடந்த 24 மணி நேரத்தில் நடந்த தாக்குதலில் 100 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காசா முனையில் இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலில் இதுவரை மொத்தம் 38,098 பாலஸ்தீன மக்கள் உயிரிழந்துள்ளதாகவும், 87,705 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும் காசா சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. அதே சமயம் இஸ்ரேலின் தாக்குதலில் உயிரிழந்த பாலஸ்தீன பத்திரிகையாளர்களின் எண்ணிக்கை 158 ஆக அதிகரித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது

## இங்கிலாந்து புதிய பிரதமர் கியர் ஸ்டார்மருடன் பிரதமர் மோடி பேச்சு: தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்ய உறுதி



லண்டன், ஜூலை 8

இந்தியா – இங்கிலாந்து இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்ய தயாராக இருப்பதாக தொலைபேசியில் வாழ்த்து தெரிவித்த பிரதமர் மோடிக்கு இங்கிலாந்து புதிய பிரதமர்கியர்ஸ்டார்மர் உறுதி அளித்துள்ளார். இந்தியா, இங்கிலாந்து இடையே பல்வேறு துறைகளில் தடையற்ற வர்த்தகம் செய்வதுதொடர்பாகஇருநாடுகளும்பல்வேறுகட்டபேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றன. இதுவரை மொத்தம் 14 சுற்று பேச்சுவார்த்தைகள் நடந்து முடிந்த நிலையில், இந்தியா, இங்கிலாந்து இரு நாடுகளிலும் பொதுதேர்தல் நடைபெற்று முடிந்துள்ளது.

மோடி 3ம் முறையாக பிரதமராக பதவி ஏற்றுள்ள நிலையில், இங்கிலாந்து தேர்தலில் தொழிலாளர் கட்சி தலைவர் கியர் ஸ்டார்மர் வெற்றி பெற்று பிரதமராக பதவி ஏற்றுள்ளார். இந்நிலையில் கியர் ஸ்டார்மரும், மோடியும் நேற்று தொலைபேசி மூலம் கலந்துரையாடினர். அப்போது பல்வேறு ஆக்கப்பூர்வமானவிஷயங்களைஇருவரும்விவாதித்ததாககூறப்படுகிறது. இதுகுறித்து இங்கிலாந்து நாட்டின் செய்தி தொடர்பாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “பிரதமர் ஸ்டார்மர் இங்கிலாந்து, இந்தியா நாடுகளிடையே வலுவான மற்றும் ஆழமான உறவை மேலும் வலுப்படுத்த விருப்பம் தெரிவித்துள்ளார். காலநிலை மாற்றம், உலகளாவிய பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றில் பிரதமர் மோடியின் தலைமையை கியர் ஸ்டார்மர் பாராட்டினார்.

இந்தியாவுடன் புதிய உத்திசார் கூட்டாண்மையே இங்கிலாந்தின் விருப்பம். கல்வி, பொருளாதாரம், பாதுகாப்பு, தொழில்நுட்பம், காலநிலை மாற்றம் உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு உறவு வலுப்படுத்தப்படும். இருநாடுகளுக்கும் பரஸ்பரம் பயனளிக்கும் இந்தியா – இங்கிலாந்து இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்ய இங்கிலாந்த தயாராக உள்ளதாக மோடியிடம் கியர் ஸ்டார்மர் தெரிவித்தார்” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய பிரதமராக பதவியேற்ற ஸ்டார்மர் நேற்று தன் முதல் அமைச்சரவை கூட்டத்தை கூட்டினார். அதில் இங்கிலாந்து எதிர்கொள்ளும் பல்வேறு சவால்கள் குறித்து அமைச்சர்களுடன் அவர் கலந்தாலோசித்தார்.

# பன்னாட்டு நிறுவனங்களில் வேலைக்கு அமர்த்தப்பட்ட 146 பழங்குடியின இளைஞர்களுக்கு பணி ஆணை

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்



சென்னை, ஜூலை 8

சென்னை தலைமைச்செயலகத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், Nettur Technical Training Foundation (NTTF) நிறுவனத்தின் மூலம் திறன் மேம்பாட்டு பயிற்சி முடித்து, பன்னாட்டு மற்றும் இந்திய முன்னணி நிறுவனத்தின் பல்வேறு பணிகளுக்கு தெரிவு செய்யப்பட்ட 146 பழங்குடியின இளைஞர்களுக்கு பணி நியமன ஆணைகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் உள்ள கள்ளக்குறிச்சி, தருமபுரி, சேலம், திருவண்ணாமலை, நாமக்கல், திருச்சி மற்றும் பிற மாவட்டங்களில் உள்ள பழங்குடியின சமூகத்தைச் சேர்ந்த பட்டப்படிப்பு, பொறியியல், தொழிற்நுட்பக் கல்வி, ஐடிஐ படித்து வேலையில்லாமல் உள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கி, அவர்கள் சமூகத்தில் உயர்ந்த நிலையில் வாழ தமிழ்நாடு அரசின் பழங்குடியினர் நலத்துறையின் மூலம் திட்டம் வகுக்கப்பட்டது.

அதன் அடிப்படையில், மலைப்பகுதிகளில் இயங்கிவரும் அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள், துறைச் சார்ந்த மாவட்ட திட்ட அலுவலர் / மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்களின் ஒத்துழைப்புடன் மலைப்பகுதிகளில் உள்ள கிராமங்களுக்கு நேரடியாக சென்று, பழங்குடியின வேலையில்லா பட்டதாரி இளைஞர்கள் 450 நபர்களை திரட்டி திருச்சி, சேலம் மற்றும் சென்னை மாவட்டங்களில் வேலைவாய்ப்பு குறித்த விழிப்புணர்வு கூட்டம் நடத்தப்பட்டது. அக்கூட்டத்தில் தகுதி வாய்ந்த 200 பழங்குடியின இளைஞர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

அதனை தொடர்ந்து, கடந்த பிப்ரவரி மாதம் 13ம் தேதி சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற விழாவில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் முன்னிலையில் தேர்வு செய்யப்பட்ட 200 பழங்குடியின இளைஞர்களுக்கும் பயிற்சிகள் அளிக்க உத்தரவுகள் வழங்கப்பட்டன. இந்த பயிற்சி உத்தரவுகள் பெற்ற 200 பழங்குடியின இளைஞர்கள், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு பயிற்சிக் கழகத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்ட கர்நாடகா மாநிலம், பெங்களூரில் உள்ள Nettur Technical Training Foundation (NTTF) என்ற பயிற்சி நிறுவனத்தின் மூலம் 3 மாத காலம் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இதுமட்டுமின்றி, திறன் மேம்பாட்டுப் பயிற்சி பெற்ற இளைஞர்களில், 146 இளைஞர்களுக்கு பன்னாட்டு நிறுவனமான ZF Rane Automotive India Private Limited மற்றும் தமிழ்நாட்டிலுள்ள தலைசிறந்த இந்திய நிறுவனங்களான Shanthi Gears Limited, HDB Financial Service, Tube Investment of India, KUN Capital Motors Private Limited போன்ற நிறுவனங்களின் மூலம் நேர்முக தேர்வுகள் நடத்தப்பட்டு அவர்களின் கல்வித்திறன் மற்றும் தனிப்பட்ட திறமைகளின் அடிப்படையில் Computerised Numerical Control பிரிவில் 67 இளைஞர்களும், Customer Relationship Management பிரிவில் 79 இளைஞர்களும் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டன. இவற்றை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் இளைஞர்களுக்கு நேரில் வழங்கினார். பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்ட 146 இளைஞர்களில் 40 பெண்கள் அடங்குவர். இந்த நிகழ்ச்சியில், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ், முதல்வரின் கூடுதல் தலைமை செயலாளர் முருகானந்தம் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## செஞ்சி கூட்டுரோட்டில் ஆம்ஸ்ட்ராங் படுகொலை செய்யப்பட்டதை கண்டித்தும் அவருக்கு நினைவஞ்சலி நிகழ்ச்சி




விழுப்புரம், ஜூலை 8


விழுப்புரம் மாவட்டம் செஞ்சி கூட்டுரோட்டில் பகுஜன் சமாஜ் கட்சியின் தமிழ் மாநில தலைவரும் தென்னிந்திய பௌத்த சங்கத்தின் தலைவருமான ஆம்ஸ்ட்ராங் அவர்கள் படுகொலை செய்யப்பட்டது கண்டித்தும் அவருக்கு நினைவஞ்சலி நிகழ்ச்சியும் அம்பேத்கர் மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் திரு மழைமேனி பாண்டியன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது அதில் பழங்குடி மக்கள் முன்னணி நிறுவன தலைவர் திரு சுடர் ஒளி சுந்தரம் அவர்களும் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் திரு தனஞ்செழியன் அவர்களும் பழங்குடி மக்கள் முன்னணியின் பொறுப்பாளர் திரு தென்னரசு அவர்களும் பகுத்தறிவாளர்களாக விழுப்புரம் மாவட்ட தலைவர் திரு நாவுக்கரசு அவர்களும் திராவிடர் கழகத்தின் மாவட்ட தலைவர் திரு கோபண்ணா அவர்களும் திராவிட முன்னேற்ற கழகத்தின் வரல்லம் ஒன்றிய துணை செயலாளர் திரு ராஜலிங்கம் அவர்களும் சமுதாயப் பற்றாளர் திரு ஆவின் ஏழுமலை அவர்களும் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் செஞ்சி நகர பொறுப்பாளர் திரு தலித் மகிழ் வரசு அம்பேத்கர் மக்கள் கட்சியின் விழுப்புரம் மாவட்ட அமைப்பாளர் திரு காசி அய்யனார் அவர்களும் பகுத்தறிவாளர்களாக பொறுப்பாளர் திரு நந்தகுமார் இந்து முன்னணி விழுப்புரம் மாவட்ட தலைவர் திரு ஜெயபிரகாஷ் அவர்களும் அவர்களும் அம்பேத்கர் மக்கள் கட்சியின் செஞ்சி ஒன்றிய தலைவர் திரு புகழேந்தி அவர்களும் வல்லம் ஒன்றிய செயலாளர் திரு பிரபு அவர்களிடம் பழங்குடி மக்கள் முன்னணியின் பொறுப்பாளர் திரு பாலு அவர்களும் செஞ்சி பௌத்த சங்கத்தின் பொறுப்பாளர் வல்லம் திருநாவு க்கரசு அவர்களும் துடுப்பாக்கம் பௌத்த மகா சங்கத்தின் செயலாளர் திரு கௌதமன் அவர்களும் என ஏனைய பொறுப்பாளர்களும் கலந்து கொண்டு வீர முழக்கமிட்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்

## அதிமுகவுக்கு எதிராக அண்ணாமலை சூழ்ச்சி: எடப்பாடி பழனிசாமியை நம்பிக்கை துரோகி என கூறியதற்கு ஆர்.பி.உதயகுமார் கண்டனம்

சென்னை, ஜூலை 8

எடப்பாடி பழனிசாமியை நம்பிக்கை துரோகி என கூறியதை வாபஸ் பெறாவிட்டால் அண்ணாமலைக்கு எதிராக போராட்டம் நடத்தப்படும் என்று அதிமுக முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் கண்டனம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அதிமுக முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது பேசிய அவர்; நாகரிகமற்ற அரசியல் பண்பாட்டை அண்ணாமலை தொடர்ந்து விதைத்து வருவதாக ஆர்.பி.உதயகுமார் கண்டனம் தெரிவித்துள்ளார். தேர்தலில் மோடி, நட்டா, ஒன்றிய அமைச்சர்கள்தொடர்ந்துபிரச்சாரம்செய்தும்பாஜகவுக்குஒருசீட்கூடகிடைக்கவில்லை. அண்ணாமலை போன்றவர்களால்தான் பாஜகவுக்கு ஒரு சீட் கூட கிடைக்கவில்லை என்று அவர் விமர்சனம் செய்துள்ளார். அண்ணாமலைக்காக யாரும் ஓட்டு போடவில்லை; மோடியை முன்னிலைப்படுத்தியே வாக்கு கேட்டார்கள்என்றும், அண்ணாமலை போன்ற பேராசைபிடித்தவர்களால்தான் பாஜக பெரும் பின்னடைவை சந்தித்துள்ளது என்றும் ஆர்.பி.உதயகுமார் கூறியுள்ளார். கோவையில் கோடிக்கணக்கான பணத்தை வாரி இரைத்தும் அண்ணாமலையை மக்கள் நிராகரித்து விட்டார்கள். மேலும், மெட்ரோ ரயில் 2வது கட்ட திட்டத்துக்காக ஒன்றிய அரசிடம் இருந்து அண்ணாமலை நிதியை பெற்றுத் தந்தாரா ? என்று அவர் கேள்வி எழுப்பினார். அதிமுகவுக்கு பின்னடைவை ஏற்படுத்த அண்ணாமலை தொடர்ந்து சூழ்ச்சிகளை செய்து வருகிறார். மோடி அருகில் பழனிசாமியை உட்கார வைத்துவிட்டு இங்கு அதிமுகவை அசைத்துப் பார்க்கும் வேலையில் அண்ணாமலை ஈடுபட்டுள்ளார் என்றார். அண்ணாமலையின் சூழ்ச்சி தமிழ்நாட்டில் எடுபடாது. அதிமுக பற்றி அண்ணாமலை பேசுவது, ஆடு நனைவதற்கு ஓநாய் கவலைப்படுவது போல உள்ளது என்று ஆர்.பி.உதயகுமார் விமர்சனம் செய்துள்ளார். பழனிசாமி நம்பிக்கை துரோகி என்ற வார்த்தையை அண்ணாமலை வாபஸ் பெறவேண்டும், இல்லாவிடில் போராட்டம்நடத்தப்படும்என்றுஆர்.பி.உதயகுமார்எச்சரிக்கைவிடுத்துள்ளார். அதிமுக தொண்டர்கள் கொதித்து எழுந்தால் அண்ணாமலை என்ன விளைவுகளை எதிர்கொள்வார் என தெரியவில்லை. இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# குற்றாலத்தில் படகு சவாரி துவக்கம்: ரூ.150 முதல் ரூ.250 வரை கட்டணம் நிர்ணயம்



தென்காசி, ஜூலை 8

குற்றாலம் ஐந்தருவி வெண்ணமடை படகு குழாமில் தண்ணீர் நிரம்பியதையடுத்து படகு சவாரி நேற்று தொடங்கியது. குற்றாலம் வருகை தரும் சுற்றுலா பயணிகள் குடும்பத்துடன் பொழுதுபோக்கும் அம்சமாக படகு சவாரி திகழ்கிறது. இயற்கை எழில், குறைந்த ஆழம், சிறிய அளவிலான குளம் ஆகியவற்றின் காரணமாக பலரும் குடும்பத்துடன் படகு சவாரி செய்ய ஆர்வம் காட்டுவார்கள். இந்தாண்டு கடந்த மே 15ம் தேதி முதல் அருவிகளில் தண்ணீர் விழுந்த போதும் குளத்தில் முழுமையாக தண்ணீர் நிரம்பாமல் இருந்தது. தற்போது தண்ணீர் வரத்து அதிகரித்ததன் காரணமாக படகு குழாம் நிரம்பியுள்ளது. இதனைத் தொடர்ந்து நேற்று காலை படகு சவாரி துவங்கியது. படகு குழாமை மாவட்ட கலெக்டர் கமல் கிஷோர் திறந்து வைத்து கொடியசைத்து துவக்கி வைத்தார்.

படகு குழாமில் மொத்தம் 31 படகுகள் உள்ளது. இவற்றில் 2 இருக்கை மிதி படகுகள் 6 ம், 4 இருக்கை மிதி படகுகள் 16ம், 4 இருக்கை துடுப்பு படகுகள் 5 ம், தனிநபர் ஹயாக் வகை படகுகள் 4 ம் அடங்கும். கடந்தாண்டை போலவே அரை மணி நேர சவாரிக்கு 2 இருக்கை படகுகளுக்கு ரூ.150ம், 4 இருக்கை படகுகளுக்கு ரூ.200ம், 4 இருக்கை துடுப்பு படகுகளுக்கு ரூ.250ம், ஹயாக் வகை படகுகளுக்கு ரூ.150ம் கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. உயிர் காக்கும் லைப் ஜாக்கெட்டுகளும் புதிதாக வரவழைக்கப்பட்டு உள்ளது.

# தமிழக சுற்றுலா தலங்களில் ரூ.40 கோடியில் வளர்ச்சி பணி: அமைச்சர் ராமச்சந்திரன் தகவல்



ஊட்டி, ஜூலை 8

தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலா தலங்களில் ரூ.40 கோடியில் பல்வேறு வளர்ச்சி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சுற்றுலாத்துறை அமைச்சர் ராமச்சந்திரன் தெரிவித்தார். நீலகிரி மாவட்டம், ஊட்டி படகு இல்லம் வளாகத்தில் தொங்கும் பாலம், ஜிப் லைன் உட்பட பல்வேறு சாகச விளையாட்டுகள் கொண்டு வருவதற்கான பணிகள்நடக்கிறது. இப்பணிகளை நேற்று சுற்றுலாத்துறை அமைச்சர் ராமச்சந்திரன் மற்றும் சுற்றுலாத்துறை ஆணையாளர் சமயமூர்த்தி ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர். ஆய்வின் போது, கலெக்டர் அருணா உடன் இருந்தார்.

பின்னர் அமைச்சர் ராமச்சந்திரன் நிருபர்களிடம் கூறியதாவது: சுற்றுலா பயணிகள் பலரும் ஊட்டிக்கு வந்துவிட்டு திரும்பிவிடுகின்றனர். அவர்கள் மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளுக்கும் செல்லும் வகையில், கோத்தகிரி, குன்னூர் போன்ற பகுதிகளில் சுற்றுலாத்துறை மூலம் புதிதாக சுற்றுலா தலம் உருவாக்க வாய்ப்புள்ளதா? என ஆய்வு மேற்கொள்ளப்படும். கடந்த ஆண்டு தமிழ்நாட்டிற்கு 28 கோடி சுற்றுலா பயணிகள் வந்துள்ளனர். இந்த ஆண்டு 32 கோடியாக அதிகரித்துள்ளது. பல்வேறு சுற்றுலா தலங்களிலும், புதிதாக சாகச விளையாட்டுகள் அறிமுகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முழுவதும் உள்ள சுற்றுலா தலங்களில் ரூ.40 கோடியில் பல்வேறு வளர்ச்சி பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. ஒன்றிய அரசிடமும் நிதி கேட்கப்பட்டுள்ளது. ஒன்றிய அரசு நிதி வந்தால், மேலும் பல்வேறு வளர்ச்சித் திட்ட பணிகள் மேற்கொள்ளப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

# சாத்தான்குளம் கொலை காவலருக்கு 4 நாள் இடைக்கால ஜாமீன்



மதுரை, ஜூலை 8

சாத்தான்குளம் வியாபாரி ஜெயராஜ். இவரது மகன் பென்னிக்ஸ் ஆகியோரது கொலை வழக்கில் இன்ஸ்பெக்டர் ஸ்ரீதர், எஸ்ஐகள் ரகுகணேஷ், பாலகிருஷ்ணன் மற்றும் போலீசார் உள்ளிட்ட 9 பேர் கைது செய்யப்பட்டு, மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். 9 பேருக்கும் கடந்த 4 ஆண்டுகளாக ஜாமீன் கிடைக்கவில்லை. இந்த வழக்கில் சிறையில் உள்ள காவலர் தாமஸ் பிரான்சிஸ், நாளை (ஜூலை 8) நடைபெறும் தனது தங்கையின் திருமணத்தில் பங்கேற்பதற்காக இடைக்கால ஜாமீன் கோரி, ஐகோர்ட் மதுரை கிளையில் மனு செய்தார். இந்த மனு நீதிபதி ஏ.ஏ.நக்கீரன்முன்புவிசாரணைக்கு வந்தது.

மனுவை விசாரித்த நீதிபதி, காவலர் தாமஸ் பிரான்சிஸ் ஜூலை 7(இன்று) மாலை 4 மணி முதல் 11ம் தேதி 4 மணி வரை 4 நாட்கள் இடைக்கால ஜாமீன் வழங்கினார். இந்த 4 நாட்களில் அவர் தினமும் மெய்ஞானபுரம் போலீசில் நேரில் ஆஜராகி கையெழுத்திட வேண்டும். மனுதாருக்கு உரிய போலீஸ் பாதுகாப்பு வழங்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளார்.


# வாகன விபத்தில் புதுமாப்பிள்ளை உட்பட 3 பேர் பலி



புவனகிரி, ஜூலை 8

கடலூர் சிதம்பரம் தேசிய நெடுஞ்சாலையில் பரங்கிப்பேட்டை அருகே புதுச்சத்திரம் மேம்பாலத்தில் டயர்பஞ்சராகி டாரஸ் லாரி ஒன்று நேற்று நின்றது. டிரைவர் பஞ்சரான டயரை சீரமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார். அப்போது லாரியின் மீது, திண்டிவனத்தில் இருந்து காரைக்காலுக்கு கோழி இறைச்சி கழிவுகளை ஏற்றிச்சென்ற மினி டெம்போ பயங்கரமாக மோதியது. இதில் காரைக்காலை சேர்ந்த மினி டெம்போ டிரைவர் சையது முகமது (25), அதிலிருந்த முகமது ரியாஸ்(20) ஆகிய இருவரும் இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்தனர். திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு தாலுகா மேல் புத்தூரைசேர்ந்தவர்கிருஷ்ணமூர்த்தி(28), அறுவடை இயந்திர டிரைவர். இவர் ஒரு பெண்ணை காதலித்து கடந்த மே மாதம் திருமணம் செய்து கொண்டார். இந்நிலையில் கிருஷ்ணமூர்த்தி நேற்று முன்தினம் இரவு, பைக்கில் செய்யாறு அடுத்த வெம்பாக்கம் அருகே எடப்பாளையம் கிராமத்தில் உள்ள அக்கா வீட்டிற்கு சென்று கொண்டிருந்தார். வெம்பாக்கம் அழிவிடைதாங்கி சாலையில் சென்றபோது, சாலையோரம் நிறுத்தியிருந்த டிராக்டர் மீது பைக் மோதியது. இதில்படுகாயம்அடைந்த கிருஷ்ணமூர்த்தி பரிதாபமாக இறந்தார்.

# விபத்தில் பலியானவரின் உடல் வேறு குடும்பத்திடம் ஒப்படைப்பு பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு கூடுதல் இழப்பீடு: சுகாதாரத்துறைக்கு ஐகோர்ட் உத்தரவு



சென்னை, ஜூளை 8

விபத்தில் மரணமடைந்தவரின் உடலை வேறு குடும்பத்தினரிடம் ஒப்படைத்த விவகாரத்தில் பாதிக்கப்பட்டவர் குடும்பத்துக்கு கூடுதல் இழப்பீடு வழங்குவது குறித்து பரிசீலித்து நடவடிக்கை எடுக்குமாறு தமிழக சுகாதாரத் துறை செயலாளருக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. கடந்த 2008ம் ஆண்டு நவம்பர் 20ம் தேதி சாலை விபத்தில் மரணடைந்த தனது கணவரின் உடலை அடையாளம் தெரியாத நபர்களுக்கு கொடுத்ததால் ஏற்பட்ட மன உளைச்சலுக்கு 25 லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்குமாறு தமிழக அரசுக்கு உத்தரவிடக் கோரி பத்மினி என்பவர் 2009ம் ஆண்டு சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குதொடர்ந்திருந்தார். சென்னை ராஜிவ்காந்தி அரசு பொது மருத்துவமனை அதிகாரிகள், தனது கணவர் உடலை வேறு குடும்பத்தினரிடம் மாற்றிக் கொடுத்து விட்டதாக அவர் தனது மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், மனுதாரரின் மன உளைச்சலுக்கு உரிய நிவாரணத்தை வழங்க வேண்டும் என்று சுகாதாரத்துறை செயலாளருக்கு 2018ம் ஆண்டு உத்தரவு பிறப்பித்திருந்தது. அதன்படி விண்ணப்பம் அளித்த பத்மினிக்கு, 2 லட்சம் ரூபாய் மட்டுமே இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில், இழப்பீட்டை 25 லட்சம் ரூபாயாக அதிகரித்து வழங்க உத்தரவிடக் கோரி பத்மினி மீண்டும் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கை விசாரித்த நீதிபதி அனிதாசுமந்த், சுகாதாரத்துறை செயலாளர்தனது மனதை செலுத்தி, இழப்பீட்டை முடிவு செய்ய வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்ட நிலையில், அதை பின்பற்றாமல், மனுதாரரின் கருத்தை கேட்காமல் இழப்பீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே, இழப்பீட்டை அதிகரித்துத் தரக் கோரிய விண்ணப்பத்தை பரிசீலித்து, மனுதாரரின் கருத்தைக் கேட்டு ஆறு வாரங்களுக்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சுகாதாரத் துறை செயலாளருக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

# பாலியல் குற்றத்திற்காக சட்டங்கள் தீவிரமாக்கப்பட்டது என்றால் பாஜ நிர்வாகிகளை முதலில் கைது செய்ய வேண்டும்: திருமுருகன் காந்தி பேச்சு



சென்னை, ஜூலை 8

பாலியல் குற்றத்தை தடுக்கத்தான் சட்டங்கள் தீவிரமாக்கப்பட்டது என்றால், முதலில் பாஜ நிர்வாகிகளைதான் கைது செய்ய வேண்டும் என்று மே17 இயக்க ஒருங்கிணைப்பாளர்திருமுருகன்காந்தி கூறினார். புழல் அடுத்த செங்குன்றத்தில் மே17 இயக்கம் சார்பில் 3 புதிய குற்றவியல் சட்டங்களை திரும்பப்பெற வலியுறுத்தி எஸ்டிபிஐ சார்பில் நேற்று முன்தினம் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. இதில், மே17 இயக்க ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டு ஒன்றிய அரசுக்கு எதிராக கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

சமஸ்கிருதத்தில் பெயர்களை மாற்றியும்,அரசியலமைப்பு, மனித உரிமைக்கு எதிராக கருப்பு சட்டங்களை அமலப்படுத்திய தற்கும் எதிர்ப்பு தெரிவித்தனர். அதனைத்தொடர்ந்து, திருமுருகன்காந்தி செய்தியாளர்களிடம் கூறியதாவது: மோடி அரசு மக்களின்கருத்துகளை கேட்காமல் எதேச்சதிகாரமாக சட்டங்களை சம்ஸ்கிருதத்தில் பெயர் மாற்றம் செய்து கொடூர சட்டமாக மாற்றி உள்ளது. அடக்குமுறை சட்டங்களாக மாற்றியதால் சாமானியர்கள் பாதிக்கப்படுவார்கள்.

வேளாண் சட்டங்கள், குடியுரிமை திருத்த சட்டங்களை எதிர்த்தது போல புதிய 3 குற்றவியல் சட்டங்களை பொதுமக்கள் எதிர்த்து போராடி அதனை திரும்ப பெறச் செய்ய வேண்டும். பாலியல் வன்கொடுமை குற்றச்சாட்டுகளை முறையாக பதிவு செய்வதில்லை. குத்துச்சண்டை வீராங்கனைகள் பாலியல் தொல்லையால் பாதிக்கப்பட்டபோது பாஜ நிர்வாகிகளை கைது செய்யாதவர்கள் பெண்களை பாதுகாப்பவர்கள் போல சித்தரிப்பதை நம்ப முடியாது. பாலியல் குற்றங்களுக்கு எதிராக சட்டங்கள் தீவிரமாக்கப்பட்டுள்ளது என்றால் முதலில் பாஜ நிர்வாகிகளைதான் கைது செய்ய வேண்டும். மணிப்பூரில் பெண்களை சீரழித்தவர்களை இது வரை கைது செய்யவில்லை என்றார்.

# ஆம்ஸ்ட்ராங் கொலை விவகாரம் பூந்தமல்லி நெடுஞ்சாலையில் மறியல்: சிபிஐ விசாரிக்க கோரிக்கை

சென்னை, ஜூலை 8

சென்னை பெரம்பூரில் பகுஜன் சமாஜ் கட்சியின் மாநிலதலைவர்ஆம்ஸ்ட்ராங் படுகொலை செய்யப்பட்டார். இது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ள நிலையில், அனைத்து அரசியல் கட்சி தலைவர்களும் கண்டனம் தெரிவித்துள்ளனர். மேலும் குற்றவாளிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினர். இந்தநிலையில் நேற்று காலை ஆம்ஸ்ட்ராங்கின் உடல் பிரேத பரிசோதனை செய்யப்பட்டு, உடலை ஒப்படைக்க மருத்துவ நிர்வாகம் முடிவு செய்த நிலையில், உடலை வாங்க உறவினர்கள் மறுத்ததுடன் தொண்டர்கள் ராஜிவ்காந்தி அரசு மருத்துவமனை வெளியே பூந்தமல்லி நெடுஞ்சாலையில் அமர்ந்து மறியலில் ஈடுபட்டனர்.

அப்போது அவர்கள், ''உண்மையான குற்றவாளிகளை கைது செய்யக் கோரியும் கொலை சம்பவம் குறித்து சிபிஐ விசாரணை நடத்த வேண்டும் என்று வலியுறுத்தினர். இதனால் போக்குவரத்து பாதிப்பும் ஏற்பட்டது. மேலும் அந்த பகுதியில் பரபரப்பு நிலவியது. இதனிடையே போலீஸ் உயரதிகாரிகள் தலைமையில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. போராட்டம் நடத்திவரும் ஆம்ஸ்ட்ராங்க் உறவினர்கள் மற்றும் தொண்டர்களிடம் காவல்துறையினர் பேச்சு வார்த்தை நடத்தினர், இருப்பினும் போராட்டத்தை கைவிடாததால் காவல் துறையினர் அவர்களை கைது செய்தனர்.

பகுஜன் சமாஜ் கட்சி தொண்டர்கள் சுமார் நூற்றுக்கும் மேற்பட்டோர் ஆம்ஸ்ட்ராங் உடலை பெரம்பூரில் உள்ள கட்சி அலுவலகத்தில் புதைக்க வேண்டும் என வலியுறுத்தி, இரு பிரிவுகளாக பிரிந்து பெரம்பூர்பேப்பர்மில்ஸ் சாலை, பெரம்பூர் முரசொலி மாறன் பூங்கா அருகே நேற்று மாலை சாலை மறியலில் ஈடுபட்டனர். சுமார் ஒரு மணி நேரம் நடந்த மறியலால் பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்பட்டனர்.

போலீசார் அவர்களிடம் பேச்சுவார்த்தைநடத்தி மறியலில் ஈடுபட்டவர்களை கலைந்து செல்ல செய்தனர்.

பகுஜன் சமாஜ் கட்சி தேசிய தலைவர் மாயாவதி வெளியிட்டுள்ள பதிவில், 'தமிழ்நாடு பகுஜன் சமாஜ் கட்சியின் மாநில தலைவர் ஆம்ஸ்ட்ராங் நேற்று முன் தினம் மாலை சென்னையில் உள்ள அவரது இல்லத்திற்கு வெளியே படுகொலை செய்யப்பட்டார். தலித் மக்களின் குரலாக இருந்த அவரது இறப்பு சோகத்தை ஏற்படுத்தி உள்ளது. இது போன்ற சம்பவங்கள் மேலும் நடைபெறாமல் இருக்க மாநில அரசு உடனடியாக கடுமையான மற்றும் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும்

சென்னைக்கு வந்து ஆம்ஸ்ட்ராங் உடலுக்கு அஞ்சலி செலுத்தி, பாதிக்கப்பட்ட அவரது குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூற இருக்கிறேன். தொண்டர்கள் அமைதி காக்க வேண்டும் என வேண்டுகோள் வைக்கிறேன்.

# தேர்தல் டெபாசிட் தொகையை திரும்ப கேட்டு வழக்கு 2 வாரங்களில் தேர்தல் ஆணையம் பரிசீலிக்க வேண்டும்: ஐகோர்ட் உத்தரவு



சென்னை, ஜூலை 8

நடந்து முடிந்த மக்களவை தேர்தலில், மதுரை தொகுதியில் போட்டியிடுவதற்காக வழக்கறிஞர் பிரகாசம் வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளார். சாதிச் சான்றிதழ் சமர்ப்பிக்கவில்லை எனக் கூறி அவரது வேட்புமனுவை தேர்தல் அதிகாரிகள் நிராகரித்தனர். இதையடுத்து, வேட்புமனுவுடன் செலுத்திய டெபாசிட் தொகை 12 ஆயிரத்து 500 ரூபாயை திருப்பித் தருமாறு தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட கோரி வழக்கறிஞர் பிரகாசம் சென்னை உயர் நீதி மன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார். இந்த மனு, பொறுப்பு தலைமை நீதிபதி ஆர். மகாதேவன் மற்றும் நீதிபதி முகமது ஷபிக் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது வேட்பு மனுவுடன் செலுத்திய டெபாசிட் தொகையை திரும்பத் தரக் கோரி மனுதாரர் உரிய படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையம் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, ஒரு வாரத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் விண்ணப்பம் அளிப்பதாக மனுதாரர் தெரிவித்தார். இதை ஏற்றுக் கொண்ட நீதிபதிகள், மனுதாரரின் விண்ணப்பம் மீது இரு வாரங்களில் தேர்தல் ஆணையம் உரிய உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று உத்தரவிட்டு வழக்கை முடித்து வைத்தனர்.

# லஞ்ச ஒழிப்புத்துறை சோதனையில் சிக்கியது; வீட்டில் ரூ.12 லட்சத்தை புதைத்த சார்பதிவாளருக்கு பதிவு இல்லாத பணி: பதிவுத்துறை அதிரடி



வேலூர், ஜூலை 8

லஞ்ச ஒழிப்புத்துறை சோதனையில் வீட்டில் புதைத்து வைத்திருந்த ரூ.12 லட்சம் சிக்கியதையடுத்து, சார்பதிவாளர் பதிவு இல்லாத அலுவலக பணிக்கு அதிரடியாக மாற்றப்பட்டார். வேலூர் மாவட்டம் காட்பாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் கடந்த ஆண்டு நடந்த தணிக்கையின்போது, 8.73 ஏக்கர் அரசு நிலம் முறைகேடாக தனியாருக்கு தாரை வார்க்கப்பட்டது கண்டு பிடிக்கப்பட்டது. இதில் தொடர்புடைய அலுவலக உதவியாளராக பணியாற்றிய சிவக்குமார் கடந்த மாதம் சஸ்பெண்ட் செய்யப்பட்டார்.

தொடர்ந்து அதிகாரிகள் நடத்திய விசாரணையில் மேலும் 100 ஏக்கர் அரசு நிலம் முறைகேடாக தனிநபர்களுக்கு பதிவு செய்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக அதிகாரிகள் தொடர்ந்து விசாரணை நடத்தி வரும் நிலையில், இந்த முறைகேடுகளில் முக்கிய புள்ளிகள் பலரை பட்டியலிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது. இதற்கிடையில் கடந்த மாதம் 19ம் தேதி வேலூர் லஞ்ச ஒழிப்பு போலீசார் திடீரென காட்பாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் ரெய்டு நடத்தினர். அப்போது, அலுவலகத்தின் பல்வேறு இடங்களில் கணக்கில் வராத ரூ.2.14 லட்சம் கண்டுபிடிக்கப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டது.

இதுதொடர்பாக சார்பதிவாளர் நித்தியானந்தம் மீது விஜிலென்ஸ் போலீசார் வழக்குப்பதிவு செய்தனர்.

தொடர்ந்து, மறுநாள்(ஜூன் 20ம் தேதி) வேலூர் அடுத்த கீழ்வலம் பகுதியில் உள்ள காட்பாடி சார்பதிவாளர் நித்தியானந்தத்துக்கு சொந்தமான வீட்டில் நடத்திய சோதனையில், தோட்டத்தில் புதைத்து வைத்திருந்த ரூ.12 லட்சம் உட்பட மொத்தம் ரூ.13 லட்சத்து 75 ஆயிரத்தை பறிமுதல் செய்தனர். இதனிடையே மருத்துவ விடுப்பில் சென்ற சார்பதிவாளர் நித்தியானந்தம், கடந்த 2 நாட்களுக்கு முன்பு பணிக்கு திரும்பினார். அப்போது அவர், பத்திரப்பதிவு இல்லாத, அலுவலக பணிக்கு செய்யாறு மாவட்ட பதிவாளர் அலுவலகத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாக பதிவுத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

# 3 ஆண்டுக்குப்பின் நடந்த பாரம்பரிய விழா; 300 ஆட்டுக்கிடாய்களை வெட்டி மண் பானையில் அறுசுவை விருந்து: 5 ஆயிரம் பக்தர்கள் பங்கேற்பு



சிவகங்கை, ஜூலை 8

சிவகங்கை அருகே வேளாங்கபட்டி கிராமத்தில் ஆயி அம்மன், மாரநாட்டுக் கருப்புசாமி, கட்டுச்சோறு கருப்பு கோயில் ஆனிகளரி பொங்கல் திருவிழா காப்பு கட்டுதலுடன் தொடங்கியது. இதைத்தொடர்ந்து 32 கிராமங்களை சேர்ந்த மக்கள் விரதத்தை தொடங்கினர். நேற்று முன்தினம் பொங்கல் வைப்பதற்காக ஒருவருக்கு 7 பானைகள் என 360 மண்பானைகளை கோயிலுக்கு எடுத்து செல்லும் நிகழ்வு நடைபெற்றது. பின்னர் கோயில் வளாகத்தில் மண்பானைகளில் முதலாவதாக ஆயி அம்மனுக்கு பொங்கல் வைக்கப்பட்டது.

தொடர்ந்து மாரநாடு கருப்புசாமிக்கும், கட்டுச்சோறு கருப்புக்கு சிறப்பு அலங்காரம் அபிஷேகம் செய்து பச்சரிசி பொங்கல் வைக்கப்பட்டது. இதையடுத்து நள்ளிரவில் பக்தர்களால் கோயிலுக்கு நேர்த்திக்கடனாக விடப்பட்ட 300 ஆடுகள் பலியிடப்பட்டன. இந்த ஆட்டுக்கறியை மண்பானையில்வைத்துசமைத்து, நேற்று காலை 6.30 மணிக்கு சிறப்பு பூஜை நடத்தி சமைத்த உணவை, 360 மண்பானைகளில் வைத்து பக்தர்கள் தலையில் சுமந்து 4 கிமீ தொலைவில் உள்ள சாப்பாட்டு பொட்டலில் இறக்கி வைத்தனர். விழாவில் பங்கேற்ற பங்காளிகள் மற்றும் 32 கிராமங்களைச் சேர்ந்த 5,000 பேருக்கு உணவு பரிமாறப்பட்டது. 3 வருடங்களுக்கு பிறகு நடந்த இந்த பாரம்பரிய திருவிழாவில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# குற்றவியல் சட்டங்கள்: புதுச்சேரியில் இன்று அதிமுக ஆர்ப்பாட்டம்

சென்னை, ஜூலை 8

3 புதிய குற்றவியல் சட்டங்கள் மூலம் இந்தி திணிக்கப்படுவதை கண்டித்து புதுச்சேரியில் ஜூலை 8ல் அதிமுக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட உள்ளது. புதிய குற்றவியல் திருத்தச் சட்டங்களுக்கு மீண்டும் ஆங்கிலத்தில் பெயர் சூட்ட அதிமுக வலியுறுத்தியது. இன்று காலை 10 மணிக்கு புதுச்சேரி ஒருங்கிணைந்த நீதிமன்றம் எதிரில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என அதிமுக பொது செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார். புதுச்சேரி மாநில அதிமுக செயலாளர் அன்பழகன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று தெரிவித்தார்.

# தாராபுரம் அருகே தந்தம், மான் கொம்பு பறிமுதல்



திருப்பூர், ஜூலை 8

தாராபுரம் அருகே ரூ.1 லட்சம்மதிப்புள்ளயானை தந்தம், மான் கொம்புகள் பறிமுதல் செய்யப்பட்டு 4 பேர் கைது செய்யப்பட்டனர். உடுமலை புறவழிச்சாலையில் தந்தம், மான் கொம்பு உள்ளிட்டவை கடத்திச் செல்லப்படுவதாக வனத்துறைக்கு தகவல் வந்தது. சந்தேகத்துக்கு இடமான 4 பேரைப் பிடித்து விசாரணை செய்ததில் கொடைக்கானலில் இருந்து கடத்தி வருவதாக வாக்குமூலம் அளித்தனர்.

# திருக்கோவிலூரில் மின்மாற்றி வெடித்து பயங்கர தீ விபத்து



திருக்கோவிலூர், ஜூலை 8

திருக்கோவிலூரில் மின்மாற்றி வெடித்ததில் தீப்பிடித்து தெருவோர கடைகள் தீயில் நாசமானது. கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர் பேருந்து நிலையம் அருகே எம்ஜிஆர் சிலை பக்கத்தில் மின்மாற்றி உள்ளது. இதன் மூலமாக திருக்கோவிலூரின் முக்கிய பகுதியான வடக்கு தெருவுக்கு மின் விநியோகம் செய்யப்பட்டு வந்தது.

இந்நிலையில் இன்று அதிகாலை 4 மணியளவில் திடீரென இந்த மின்மாற்றி வெடித்து சிதறியதால் தீ பற்றி எரிந்தது. மின்மாற்றியில் இருந்த ஆயில்சிதறியதால்அருகே இருந்த தெருவோர கடைகளுக்கு தீ மளமளவென பரவியது. இதுகுறித்து தகவல் அறிந்த திருக்கோவிலூர் தீயணைப்பு துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து சுமார் 1 மணி நேரம் போராடி தீயை அணைத்தனர்.

இருப்பினும் 4 தெருவோர கடைகள், பேருந்து நிலையத்தில் பூ வியாபாரம் செய்யும் கங்கா என்பவரின்ஸ்கூட்டி, ஒருதள்ளு வண்டி ஆகியவை முழுவதும் எரிந்து நாசமானது.

திருக்கோவிலூர் மின் துறை ஊழியர்கள் சம்பவ இடத்திற்கு நேரில் வந்து மின் இணைப்பை துண்டித்து சீரமைப்பு பணிகளை மேற்கொண்டனர். இதன் காரணமாக திருக்கோவிலூர் பகுதி முழுவதும் சுமார் 2 மணி நேரம் மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

# கடன் கொடுத்த நிதி நிறுவன ஊழியர்கள் மிரட்டல்; தாய், மகன் தூக்கிட்டு தற்கொலை: உருக்கமான வீடியோ, கடிதம் சிக்கியது



பேரணாம்பட்டு, ஜூலை 8


தனியார் நிதி நிறுவன ஊழியர்கள் மிரட்டிய நிலையில், கடன் தொல்லையால் செல்போனில் உருக்கமான வீடியோ பதிவிட்டும், கடிதம் எழுதி வைத்தும் தாய், மகன் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டனர். வேலூர் மாவட்டம் பேரணாம்பட்டு ஏரிகுத்தி பகுதியை சேர்ந்தவர் அன்சர்(58),ஆட்டோடிரைவர். இவரது மனைவி மும்தாஜ்(50). இவர்களது மகன் இம்ரான்(24), வெல்டிங் தொழிலாளி. இவருக்கும் அதே பகுதியை சேர்ந்த அர்ஷாவுக்கும் திருமணமாகி ஆண் குழந்தை உள்ளது. அர்ஷா 5 மாத கர்ப்பிணியாக உள்ளதால் தாய் வீட்டிற்கு அனுப்பி வைத்துள்ளனர். அன்சர் பல இடங்களில் கடன்கள் வாங்கி உள்ளார். அதை திரும்ப செலுத்த முடியாத நிலையில், கடன் கொடுத்தவர்கள் அடிக்கடி வீட்டிற்கு வந்து தொந்தரவு செய்துள்ளனர். இதனால் அவர் சில நாட்களாக வீட்டிற்கு வராமல் இருந்துள்ளார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை அன்சர் கடன் பெற்ற தனியார் நிதி நிறுவன ஊழியர்கள் வந்து கடன் தொகையை செலுத்தும்படி மிரட்டி, தகாத வார்த்தைகளால் திட்டியதாக கூறப்படுகிறது. இதில் மனமுடைந்த மும்தாஜ், மகன் இம்ரான் வீட்டில் இருந்து வெளியே வராமல் இருந்தனர். நேற்று மதியம் 12 மணி ஆகியும் கதவை திறக்காததால் அக்கம் பக்கத்தினர் கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்தனர். அப்போது இம்ரான்,அவரது தாய் மும்தாஜ் ஆகிய இருவரும் மின்விசிறிகளில் புடவையால் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டிருந்தனர். தகவலறிந்து பேரணாம்பட்டு போலீசார் வந்து விசாரித்தனர். இம்ரானின் செல்போனை ஆய்வு செய்ததில் தற்கொலை செய்வதற்கு முன்பு உருக்கமான வீடியோவை பதிவு செய்து வைத்திருந்தார்.

அதில், 'நான்யாரிடமும் கடன் வாங்கவில்லை. என்னிடம் கடன் தொகையை கேட்டு தொந்தரவு செய்வது எந்த விதத்தில் நியாயம்? கடன் கொடுத்தவர்கள் என் அப்பாவிடம் கேளுங்கள். ஆனால் என்னை தொந்தரவு செய்வதால் வாழ முடியவில்லை' என தெரிவித்துள்ளார்.

மேலும் மும்தாஜ் எழுதிய கடிதத்தில், 'கடன் கொடுத்தவர்கள் தொந்தரவு செய்யும் நிலையில், தனியார்நிதி நிறுவனஊழியர்கள் 5 பேர் கும்பலாக வந்து எங்களை மிரட்டினர். இதனால் மன விரக்தியில் தற்கொலை செய்து கொள்கிறோம்' எனஎழுதி வைத்துள்ளார். இதன்படி அவர்களை மிரட்டிய தனியார் நிதி நிறுவன ஊழியர்கள் யார் என்பது குறித்து போலீசார் விசாரித்து வருகின்றனர்.

# ஒகேனக்கல் காவிரியில் நீர்வரத்து 4 ஆயிரம் கனஅடியாக நீடிப்பு



மேட்டூர், ஜூலை 8

கர்நாடக அணைகளில் இருந்து நீர்திறப்பால் ஒகேனக்கல் காவிரியில் நீர்வரத்து இன்று 2வதுநாளாக 4ஆயிரம் கனஅடியாக நீடிக்கிறது. கர்நாடக அணைகளில் இருந்து நீர் திறப்பு மற்றும் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்யும் மழையை பொறுத்து ஒகேனக்கல் மற்றும் மேட்டூர்அணைக்கானநீர்வரத்து அதிகரிப்பதும், குறைவதுமாக உள்ளது. ஒகேனக்கல் காவிரியில் கடந்த சில வாரங்களாக நீர்வரத்து ஆயிரம் கனஅடிக்கும் குறைவாக இருந்த நிலையில் தற்போது நீர்வரத்து அதிகரித்துள்ளது. நேற்று காலை 2ஆயிரம் கனஅடியாக இருந்த நீர்வரத்து மாலையில் 4ஆயிரம் கன அடியாக அதிகரித்தது. இன்று காலையும் நீர்வரத்து அதே அளவில் நீடிக்கிறது.

கர்நாடக மாநிலத்தின் குடகுமலை பகுதியில் கனமழை பெய்து வருகிறது. இதனால் அங்குள்ள கபினி, கிருஷ்ணராஜசாகர் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து வேகமாக நிரம்பி வருகின்றன. 84 அடி உயரம் கொண்ட கபினி அணையின் நீர்மட்டம் 83 அடியை தொட்டுள்ளது. இதேபோல் 124 அடி உயரம் கொண்ட கிருஷ்ணராஜசாகர்அணையின் நீர்மட்டம் 100 அடியை தாண்டி உள்ளது. இரு அணைகளில் இருந்தும் சுமார் 4ஆயிரம் கன அடி அளவிற்கு தண்ணீர் திறக்கப்படுகிறது. இதனால் காவிரியில் நீர்வரத்து அதிகரித்து ஒகேனக்கல் அருவிகளில் தண்ணீர் மிதமாக கொட்டுகிறது.

இதேபோல், மேட்டூர் அணைக்கு நேற்று 1,281 கன அடியாக இருந்த நீர்வரத்து, இன்று 1,465 கன அடியாக அதிகரித்துள்ளது.

அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக 1,000 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. நேற்று 39.70 அடியாக இருந்து நீர்மட்டம், இன்று 39.76 அடியாக சற்று உயர்ந்துள்ளது. நீர் இருப்பு 11.96 டிஎம்சியாக உள்ளது.

# விவசாய நிலங்களை வீட்டுமனைகளாக மாற்ற லஞ்சமா? வேளாண் இணை இயக்குநர் ஜீப்பில் ரூ.1.26 லட்சம் பறிமுதல்: லஞ்ச ஒழிப்பு போலீசார் அதிரடி



அரக்கோணம், ஜூலை 8

அரக்கோணம் அருகே வேளாண் இணை இயக்குநரின் ஜீப்பில் ரூ.1.26 லட்சத்தை லஞ்ச ஒழிப்பு போலீசார் பறிமுதல் செய்தனர். ராணிப்பேட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் (பொறுப்பு) தபேந்திரன் மற்றும் ஊழியர்கள் நேற்று அரக்கோணம் பகுதியில் வீட்டுமனைப்பிரிவுகளாக மாற்றுவதற்கு தடையில்லா சான்றுகள் கேட்ட நிலங்களை ஆய்வு செய்தனர்.

அப்போது, அவர்களை திடீரென மடக்கிய, மாவட்ட ஆய்வு குழு துணை அலுவலர் பூமா, ராணிப்பேட்டைமாவட்ட லஞ்ச ஒழிப்புத்துறை குழுவினர்தடையில்லாசான்று வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு தகவல்கள் தொடர்பாக விசாரணை நடத்தினர்.

மேலும் அவர்கள் வந்த ஜீப்பையும் சோதனை செய்தனர். அதில் இருந்த ரூ.1.26 லட்சத்தை பறிமுதல் செய்தனர். மேலும் இணை இயக்குநர் தபேந்திரனிடம் இருந்த ரொக்கப்பணமும் பறிமுதல் செய்யப்பட்டது. ஜீப்பில் இந்த பணம் எப்படி வந்தது? வீட்டுமனை பிரிவு (லேஅவுட்) அமைப்பதற்கு தடையில்லா சான்று வழங்குவதற்காக பெறப்பட்ட லஞ்சப் பணமா? என்று இணை இயக்குநர் மற்றும் ஊழியர்களிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பாக்கு தோப்பில் முகாமிட்ட யானைகள் டிரோனில் கண்காணித்து விரட்டியடிப்பு



கோவை, ஜூலை 8

கோவை, போளுவம்பட்டி, மதுக்கரை வன சரகத்துக்குட்பட்ட வனப்பகுதிகளில் இருந்து யானைகள் கூட்டம் கூட்டமாக வெளியேறி மருதமலை அடிவாரப் பகுதி மற்றும் விளைநிலங்களில் அடிக்கடி சுற்றி திரிந்து வருகின்றன. இந்த நிலையில் வனத்திலிருந்து வெளியேறிய 20 யானைகள் கொண்ட கூட்டம் நரசிபுரம் பகுதியில் நேற்று முகாமிட்டன. இதில் மக்களால் 'அரிசி கொம்பன்' என அழைக்கப்படும் யானை மட்டும் முட்டத்து வயல் பகுதியில் உள்ள ரேஷன் கடையை உடைத்து அரிசியை தின்றுவிட்டு பூண்டி வனப்பகுதியில் ஒதுங்கியது.

இதை தொடர்ந்து குட்டி மற்றும் மூன்று யானைகள் கொண்ட கூட்டம் செம்மேடு தனியார் பாக்கு தோட்டத்தில் புகுந்தன. அப்போது யானைகள் சோர்வாக இருந்ததால் தோப்பிற்குள்ளேயே இருந்து பாக்கு மரங்களை தின்றன.

விவசாயிகள் மூலம் இதையறிந்த மதுக்கரை வனத்துறையினர் விரைந்து வந்து டிரோன் கேமரா மூலம் யானைகளின் நடமாட்டத்தை கண்காணித்தனர். இந்த நிலையில் நேற்று அமாவாசை என்பதால் பூண்டி கோவிலுக்கு ஏராளமான பக்தர்கள் இருசக்கர வாகனங்களில் சென்று வந்தனர். இதனால் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு யானைகள் பாக்கு தோப்பிலே இருக்குமாறு அதனை விரட்டாமல் பார்த்துக் கொண்டனர். பின்னர் இருட்டாக தொடங்கியதும் பட்டாசு வெடித்து யானைகளை வனப்பகுதிக்குள் வனத்துறையினர் விரட்டினர்.

குட்டி இருப்பதால் காட்டு யானைகள் வீரகாளியம்மன் கோவில் பகுதியில் முகாமிட்டுள்ளதாக மலை வாழ் மக்கள் தெரிவித்தனர். காட்டு யானைகள் வருகை அதிகரித்து உள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர்.

# ஜெயக்குமார் மரண வழக்கு; காங்கிரஸ் நிர்வாகிகள் இருவரிடம் விசாரணை



நெல்லை, ஜூலை 8

நெல்லை காங்கிரஸ் மாவட்ட தலைவர் ஜெயக்குமார் மர்ம மரணம் தொடர்பாக சிபிசிஐடி போலீசார், நிர்வாகிகள் இருவரிடம் 2 மணி நேரம் கிடுக்கிப்பிடி விசாரணை மேற்கொண்டனர். நெல்லைகிழக்குமாவட்ட காங்கிரஸ் தலைவர் ஜெயக்குமார்தனசிங் மர்ம மரணம் தொடர்பாக சிபிசிஐடி போலீசார், விசாரித்து வருகின்றனர். இந்நிலையில் நேற்று திசையன்விளை பகுதியை சேர்ந்த காங்கிரஸ் மனித உரிமைத்துறை நிர்வாகி விவேக் முருகன், கிழக்கு மாவட்ட காங்கிரஸ் செயலாளர் மருதூர் மணிமாறன் ஆகியோரிடம் சிபிசிஐடி போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

4 அதிகாரிகள் கொண்ட 2 குழுவினர், இவர்களிடம் சுமார் 2 மணி நேரம் விசாரணை நடத்தினர். அப்போது ஜெயக்குமார் கடிதத்தில் குறிப்பிட்டிருந்த நபர்களின் பெயர்களை கேட்டு பல்வேறு கேள்விகளை எழுப்பினர். இந்த தகவல்களை வாக்குமூலமாக பதிவு செய்து கொண்டனர். கடந்த சில நாட்களாக ஜெயக்குமார் வழக்கு விசாரணையில் எந்த முன்னேற்றமும் இல்லாமல் இருந்த நிலையில், தற்போது சிபிசிஐடி போலீசார் விசாரணையை தீவிரப்படுத்தி இருப்பதால் வழக்கு விசாரணை சூடுபிடித்துள்ளது.

# சாத்தான்குளம் கொலை வழக்கு: காவலர் தாமஸுக்கு ஜாமின் வழங்கியது ஐகோர்ட் கிளை





சென்னை, ஜூலை 8

சாத்தான்குளம் தந்தை மகன் கொலை வழக்கில் காவலர் தாமஸ் பிரான்சிசுக்கு உயர்நீதிமன்ற மதுரைக் கிளை இடைக்கால ஜாமின் வழங்கி உத்தரவிட்டுள்ளது.


மகள் திருமணத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்று காவலர் தாமஸ் இடைக்கால ஜாமின் கோரியதை ஏற்று ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது. காவலர் தாமசுக்கு இன்று மாலை 4 மணி முதல் 11ம் தேதி மாலை 4 மணி வரை 4 நாட்கள் இடைக்கால ஜாமின் வழங்கி உத்தரவு பிறப்பித்துள்ளது.

# கடலில் மிதந்த இலங்கை படகு



வேதாரண்யம், ஜூலை 8

நாகப்பட்டினம் மாவட்டம் வாய்மேடு அருகே சிறுதலைக்காடு மீனவ கிராமத்தை சேர்ந்த மீனவர்கள் நேற்று முன்தினம் அதிகாலை 4 மணிக்கு மீன் பிடிக்க கடலுக்கு சென்றனர். அப்போது கவிழ்ந்த நிலையில் ஒரு பைபர் படகு மிதந்தது. அதிர்ச்சி அடைந்த மீனவர்கள் அந்த படகை, தங்களது படகில் கட்டி நள்ளிரவில் கரைக்கு இழுத்து வந்தனர். இது பற்றி வேதாரண்யம் கடலோர காவல் குழும போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். போலீசார் அந்த படகை கைப்பற்றி சோதனை செய்ததில், அது இலங்கையை சேர்ந்த படகு என தெரிய வந்தது. அது போதை பொருள் கடத்தலுக்கு பயன்படுத்தியதா அல்லது வேறு யாரும் இலங்கையில் இருந்து தப்பி வந்தார்களா, கரையில் இருந்த போது காற்றின் வேகத்தில் இங்கு கரை ஒதுங்கியதா என்பது குறித்து போலீசார் விசாரித்து வருகின்றனர்.



## 55 வயது ஹீரோவுடன் 22 வயது நடிகை நெருக்கம்: நெட்டிசன்கள் கடும் தாக்கு

55 வயது நடிகருடன் 22 வயது நடிகை ஆபாசமாக நெருக்கம் காட்டியிருப்பதற்கு நெட்டிசன்கள் கொதித்துப்போயுள்ளனர். தெலுங்கு நடிகர் ரவிதேஜாவுக்கு 55 வயதாகிறது. தொடர்ந்து ஆக்ஷன் படங்களில் நடித்து வந்த இவர், இப்போது கிளு கிளுப்பான படமொன்றில் நடித்துள்ளார். இப்படத்துக்கு 'மிஸ்டர் பச்சன்' என தலைப்பு வைத்துள்ளனர். இந்த படத்தில் 22 வயதே ஆன பாக்யஸ்ரீ என்பவர் ஹீரோயினாக நடிக்கிறார். சமீபத்தில் இப்படத்தின் டீசர் வெளியானது. இதில் பாக்யஸ்ரீயுடன் ரவிதேஜா கடும் நெருக்கம் காட்டி நடித்துள்ளார். அதிலும் குறிப்பாக அந்த காட்சிகள் ஆபாசமாக இருப்பதாக ரசிகர்கள் கூறி வருகிறார்கள்.

இந்த டீசரை பார்த்த நெட்டிசன்கள், ரவிதேஜாவை கடுமையாக விமர்சனம் செய்கிறார்கள். 'வயதான ஹீரோவுக்கு இளம் நடிகை ஜோடியாக நடிப்பது வழக்கம்தான். ஆனால் இதுபோல் ஆபாசமாக யாருமே நடித்தது கிடையாது. மகள் வயதுடைய ஒருவருடன் இப்படி நடிக்கலாமா?' என நெட்டிசன் ஒருவர் கேள்வி எழுப்பியுள்ளார். 'டீசரில் வரும் காட்சிகளெல்லாம் முகம் சுழிக்க வைக்கிறது. இதை பார்க்கும் பிஞ்சு நெஞ்சங்கள் தவறான வழியைத்தான் தேர்ந்தெடுப்பார்கள்' என ஒரு நெட்டிசன் கருத்து பதிவிட்டுள்ளார். இதுபோல் பலரும் இந்த காட்சிகளுக்கு கடும் விமர்சனங்களை முன்வைத்துள்ளனர். சென்சாரில் இந்த காட்சிகளை நீக்க வேண்டும் என்றும் கோரியுள்ளனர்.

## கான்ஸ்டபிள் நந்தன் ஆகிறார் யோகிபாபு



யோகி பாபு கதையின் நாயகனாக நடிக்கும் படம் கான்ஸ்டபிள் நந்தன். சங்கர் புரொடக்ஷன்ஸ் சார்பில் டி.சங்கர் திருவண்ணாமலை தயாரிக்கிறார். படம் குறித்து இயக்குனர் பூபால நடேசன் கூறியது: சசிகுமார், சுந்தர்.சி, களஞ்சியம் உள்ளிட்ட இயக்குனர்களிடம் உதவி இயக்குனராக பணியாற்றினேன். 15 வருட போராட்டத்துக்கு பிறகு இயக்குனர் ஆகியுள்ளேன். திருவண்ணாமலையில் இன்று தொடக்க விழா நடக்கிறது. அதன் பிறகு ஹீரோயின், மற்ற நட்சத்திரங்கள், டெக்னீஷியன்கள் தேர்வு நடைபெறும்.

எனது நண்பர் ஒருவர் கான்ஸ்டபிள். அவர் வாழ்க்கையில் நடந்த சம்பவத்தை மையமாகக் கொண்டு இப்படம் உருவாகிறது. இதில் கான்ஸ்டபிள் நந்தனாக நடிக்கும் யோகி பாபுவின் கேரக்டர் கருணையின் உச்சமாக இருக்கும். அதேபோல் மிருகத்தனத்தின் உச்சமாக ரவி மரியா கேரக்டர் இருக்கும். இதில் எமோஷனல் டிராமா ஜானரில் உருவாகும் கதை. எனவே எமோஷனலான யோகி பாபுவை இதில் பார்க்கலாம். அவருக்கு மனைவியாக நடிப்பவருக்கான தேர்வு நடந்து வருகிறது.



## புதிய அவதாரத்தில் சிவராஜ் குமார்

கன்னடத்தில் வெற்றிபெற்ற 'சப்த சாகரதாச்சே எல்லோ' மற்றும் அதன் 2வது பாகம் 'சப்த சாகரதாச்சே எல்லோசைடு ஏ' படங்களின் இயக்குனர் ஹேமந்த் ராவ் இயக்கத்தில் புதிய படத்தில் சிவராஜ் குமார் ஹீரோவாக நடிக்கிறார். வைஷாக் கவுடா தயாரிக்கிறார்.

இப்படத்தின் டைட்டில் லுக்கை படக்குழு வெளியிட்டது. இதுகுறித்து ஹேமந்த் ராவ் கூறுகையில், 'நான் இயக்கிய 'சப்த சாகரதாச்சே எல்லோசைடு ஏ' படத்தின் ஷூட்டிங் முடிந்ததும் இந்த ஸ்கிரிப்ட்டை எழுதினேன். சிவண்ணா இந்த கான்செப்ட் தனக்கு மிகவும் பிடித்திருப்பதாக சொன்னார். அவருக்காக படம் உருவாக்குவது என்பது மிகவும் கடினமானது. காரணம், அவர் 120 படங்களுக்கு மேல் நடித்துள்ள பிரபலமான நடிகர். இதுவரை அவர் ஏராளமான வித்தியாசமான கேரக்டர்களில் நடித்துவிட்டார் என்றாலும், தற்போது நான் இயக்கும் படம் அவரை புதியதொரு அவதாரத்தில் வெளிப்படுத்தும். பான் இந்தியா படமான இது அடுத்த ஆண்டு திரைக்கு வருகிறது' என்றார்.

## புற்றுநோயாளிகளுக்கு தலைமுடியை தந்த பாடகி

புற்றுநோயாளிகளுக்காக தனது தலைமுடியை தானமாக கொடுத்திருக்கிறார் பாடகி நித்யஸ்ரீ. தமிழ், இந்தியில் பல படங்களில் பின்னணி பாடி வருகிறார் நித்யஸ்ரீ. இவர் இன்ஸ்டாகிராமில் ஆக்டிவ்வாக இருக்கிறார். இவருக்கு 1.6 மில்லியன் பாலோயர்கள் இருக்கிறார்கள். இந்நிலையில் புற்று நோயாளிகளுக்கு உதவும் வகையில் நீளமான தனது தலைமுடியை பாதியாக வெட்டியிருக்கிறார். வெட்டிய முடியை புற்றுநோய் மருத்துவமனைக்கு தந்திருக்கிறார். இவரது இந்த செயலை ரசிகர்கள் பலரும் பாராட்டி வருகிறார்கள். இதற்கு முன் தமிழகத்தை சேர்ந்த பெண் போலீஸ் ஒருவரும் இதுபோல் செய்திருந்தார். அவருக்கும் பல தரப்பிலிருந்து பாராட்டுகள் கிடைத்தது.

## உலக அங்கீகாரம் பெற்று சாதனைப் படைத்த 'கேப்டன் மில்லர்'




10வது லண்டன் நேஷனல் ஃபில்ம் அகாடெமி திரைப்பட விருதுகளில், சத்ய ஜோதி பிலிம்ஸ் தயாரிப்பில், தனுஷ் நடிப்பில் உருவான "கேப்டன் மில்லர்" திரைப்படம், 'சிறந்த வெளிநாட்டுத் திரைப்படம்' என்ற பிரிவின் கீழ் விருது பெற்றுள்ளது. இந்த விருது வழங்கும் விழாவில், "கேப்டன் மில்லர்" படம், உலகின் பல சிறந்த வெளிநாட்டுப் படங்களுடன் இணைந்து பரிந்துரைக்கப்பட்டது, எனினும் அனைத்துப் படங்களையும் தாண்டி, லண்டனில் உள்ள போர்செஸ்டர் ஹாலில் நடந்த மதிப்புமிக்க 10 வது லண்டன் நேஷனல் ஃபில்ம் அகாடெமி திரைப்பட விருதுகளின் போது, சத்யஜோதி பிலிம்ஸின் 'கேப்டன் மில்லர்' 'சிறந்த வெளிநாட்டுத் திரைப்பட விருது' பெற்றுள்ளது.

இந்த செய்தினை ரசிகர்கள் தற்போது, உற்சாகத்துடன் பகிர்ந்து வருகிறார்கள். சத்ய ஜோதி பிலிம்ஸ் T.G. தியாகராஜன் வழங்க, செந்தில் தியாகராஜன் மற்றும் அர்ஜுன் தியாகராஜன் இப்படத்தைத் தயாரித்துள்ளனர். இயக்குநர் அருண் மாதேஸ்வரன் இயக்கத்தில், வரலாற்றுப் பின்னணியில், ஆங்கிலேயர் காலகட்டத்தில் அவர்களுக்குச் சிம்ம சொப்பனமாக இருந்த, கேப்டன் மில்லரின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு இப்படம் உருவாகியிருந்தது. இப்படத்தில், தனுஷ், பிரியங்கா மோகன் முதன்மைப்பாத்திரத்தில் நடிக்க, சிவராஜ்குமார், சந்தீப் கிஷன் உட்படப் பல முன்னணி நட்சத்திரங்கள் முக்கிய பாத்திரங்களில் இணைந்து நடித்திருந்தனர்.

கேப்டன் மில்லர், திரையரங்கு வெளியீட்டின் போதே, ரசிகர்கள் மற்றும் விமர்சகர்கள் மத்தியில், மிகப்பெரும் பாராட்டுக்களைக் குவித்தது. அதனைத் தொடர்ந்து, ஓடிடியில் வெளியான இப்படம், உலகெங்கிலும் உள்ள 14 நாடுகளில் டாப் 10 தரவரிசையில் இடம் பிடித்தது. மேலும் இது இந்தியா உட்பட 9 நாடுகளில் டாப் 10 படங்களில் முதல் இடம் பிடித்து சாதனை படைத்தது.



## கரும்புள்ளி கிராமம் உண்மை சம்பவம் படமானது


விஎஸ் ஃபிலிம்ஸ் மேக்கர்ஸ் மற்றும் அனகா பிக்சர்ஸ் நிறுவனம் சார்பில் எஸ். ஜெயபாலா, ஜி. சுகன்யா இணைந்து தயாரிக்கும் படம்'கரும்புள்ளி கிராமம்'. இப்படத்தில் டான்ஸ் மாஸ்டர் தினேஷ் கதாநாயகனாகவும் கதாநாயகியாக ஸ்வேதா டோராத்தி நடிக்கிறார்கள். யோகி பாபு காமெடி கேரக்டரில் நடிக்கிறார் மற்றும் ஜெய்பீம் மொசக்குட்டி கவிதா ரவி ஜானகி உள்ளிட்டோர் நடிக்கிறார்கள்.

ராசா ஆனந்த், கதை திரைக்கதை வசனம் எழுதி இயக்குகிறார். ஒளிப்பதிவு வெற்றிவேல் முருகன். இசை ஜெகன் கல்யாண். எடிட்டிங் ராஜேந்திர சோழன். ஒரு குக்கிராமத்தில் உண்மையாக நடந்த காதல் சம்பவத்தின் பின்னணியில் இப்படம் உருவாகிறது. இதன் இறுதி கட்ட படப்பிடிப்பு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. விரைவில் திரைக்கு வர உள்ளது.

## 26ம் தேதி வெளியாகும் டெட்பூல் அன்ட் வோல்வரின்




லாஸ் ஏஞ்சல்ஸ்: மார்வெல் நிறுவன சூப்பர் ஹீரோக்களுக்கு உலகம் முழுவதும் ரசிகர்கள் இருக்கின்றனர். 'கேப்டன் அமெரிக்கா', 'அயர்ன்மேன்', 'தோர்', 'ஹல்க்' என்று சொல்லப்படும் அந்த பட்டியலில், வோல்வரின் மற்றும் டெட்பூல் கதாபாத்திரத்துக்கு அதிக ரசிகர்கள் இருக்கின்றனர். இந்நிலையில், வோல்வரின் மற்றும் டெட்பூல் கதாபாத்திரத்தை இணைத்து உருவாக்கப்பட்டுள்ள படம், 'டெட்பூல் அன்ட் வோல்வரின்'.



மார்வெல் சினிமாடிக் யுனிவர்ஸின் 34வது படமான இது, 'டெட்பூல்' மற்றும் 'டெட்பூல் 2' ஆகிய படங்களின் தொடர்ச்சியாக உருவாக்கப்பட்டுள்ளது. ஷான் லெவி இயக்கியுள்ள இதில் ஹியூ ஜேக்மேன் வோல்வரினாகவும், ரியான் ரெனால்ட்ஸ் டெட்பூலாகவும் நடித்துள்ளனர். இப்படத்தின் டிரைலர் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் வரவேற்பு பெற்றுள்ளது. வரும் 26ம் தேதி தமிழ் உள்பட பல்வேறு மொழிகளில் படம் திரைக்கு வருகிறது.



## விம்பிள்டன் டென்னிஸ் 3வது சுற்றில் சின்னர் ராடுகானு வெற்றி

லண்டன்: கிராண்ட்ஸ்லாம் தொடர்களில் ஒன்றான விம்பிள்டன் டென்னிஸ் தொடர் லண்டனில் நடந்து வருகிறது. இதில் மகளிர் ஒற்றையர் பிரிவில் நேற்றிரவு நடந்த 3வது சுற்று போட்டியில் இங்கிலாந்து 21 வயது எம்மா ராடுகானு, 62, 63 என 9ம் நிலை வீராங்கனையான கிரீஸ் நாட்டின் மரியாசக்கரியை வீழ்த்தினார். 2ம் நிலை வீராங்கனையான அமெரிக்காவின் கோகோ காப், 6-4, 6-0 என இங்கிலாந்தின் சோனாய் கர்தலையும், அமெரிக்காவின் மேடிசன் கீஸ் 64,63 என உக்ரைனின் மார்டா கோஸ்ட்யுக்கையும், குரோஷியாவின் டோனா வெக்கிச் 7-6, 6-7, 6-1 என உக்ரைனின் தயானா யாஸ்ட்ரெம்ஸ்காவையும் வீழ்த்தி 4வதுசுற்றுக்குள் நுழைந்தனர். ஆடவர் ஒற்றையரில் முதல் நிலை வீரரான இத்தாலியின் ஜானிக் சின்னர் 6-1, 6-4,6-2 என செர்பியாவின் மியோமிர் கெக்மனோவிக்கை வென்று 4வதுசுற்றுக்குள் நுழைந்தார்.

## நீளம் தாண்டுதல் வீரர் ஜெஸ்வின் ஆல்ட்ரின் தரவரிசை அடிப்படையில் பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி




பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கு தமிழ்நாட்டிலிருந்து மேலும் ஒரு தடகள வீரர் தகுதி பெற்றுள்ளார். நீளம் தாண்டுதல் வீரர் ஜெஸ்வின் ஆல்ட்ரின்தரவரிசைஅடிப்படையில்பாரீஸ்ஒலிம்பிக்போட்டிக்கு தகுதி பெற்றார். தமிழ்நாட்டிலிருந்து ஏற்கனவே 5 வீரர்கள் தகுதி பெற்றுள்ள நிலையில் தற்போது மேலும் ஒரு தடகள வீரர் தகுதி பெற்றுள்ளார்.

## 13 ரன் வித்தியாசத்தில் ஜிம்பாப்வே அணியிடம் இந்தியா அதிர்ச்சி தோல்வி



ஜிம்பாப்வே அணியுடனான முதல் டி20 போட்டியில், இந்தியா 13 ரன் வித்தியாசத்தில் அதிர்ச்சி தோல்வியைத் தழுவியது. ஜிம்பாப்வேயில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள சுப்மன் கில் தலைமையிலான இந்திய அணி, மொத்தம் 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் விளையாடுகிறது. இந்த தொடரில், உலக கோப்பையில் விளையாடிய சீனியர் வீரர்களுக்கு ஓய்வளிக்கப்பட்டு, இளம் வீரர்கள் அடங்கிய இந்திய அணி தேர்வு செய்யப்பட்டுள்ளது. ஹராரே ஸ்போர்ட்ஸ் கிளப் மைதானத்தில் நேற்று நடந்த முதல் போட்டியில், டாஸ் வென்ற இந்திய அணி கேப்டன் கில் முதலில் பந்துவீச முடிவு செய்தார். இந்திய அணியில் ரியான் பராக், அபிஷேக் ஷர்மா, துருவ் ஜுரெல் அறிமுகமாகினர்.

வெஸ்லி, இன்னொசென்ட் இணைந்து ஜிம்பாப்வே இன்னிங்சை தொடங்கினர். இன்னொசென்ட் கோல்டன் டக் அவுட்டாகி வெளியேற அந்த அணிக்கு அதிர்ச்சி தொடக்கமாக அமைந்தது. பிரையன் பென்னட் 22, வெஸ்லி 21, கேப்டன் சிக்கந்தர் 17 ரன்னில் பெவிலியன் திரும்பினர். டியான் கிளைவ் பொறுப்புடன் விளையாடி ஸ்கோரை உயர்த்தினர். டியான் 23 ரன் எடுத்து ஆட்டமிழக்க, மற்ற வீரர்கள் சொற்ப ரன்னில் அணிவகுத்தனர். ஜிம்பாப்வே 20 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 115 ரன் எடுத்தது. கிளைவ் 29 ரன், சதாரா (0) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இந்திய பந்துவீச்சில் பிஷ்னோய் 4 (42, வாஷிங்டன் 2, முகேஷ், ஆவேஷ் தலா 1 விக்கெட் வீழ்த்தினர். இதைத் தொடர்ந்து, 20 ஓவரில் 116 ரன் எடுத்தால் வெற்றி என்ற எளிய இலக்குடன் இந்தியா களமிறங்கியது. அபிஷேக், கில் இணைந்து துரத்தலை தொடங்கினர். அபிஷேக் டக் அவுட்டாகி ஏமாற்றமளித்தார். ஒரு முனையில் கில் உறுதியுடன் போராட, சக வீரர்கள் ஒற்றை இலக்க ரன்னில் உள்ளேஞ் வெளியே விளையாடினர். கில் 31 ரன் (29 பந்து, 5 பவுண்டரி) விளாசி சிக்கந்தர் பந்துவீச்சில் கிளீன் போல்டாக, இந்தியா 10.2 ஓவரில் 47 ரன்னுக்கு 6 விக்கெட் இழந்து திணறியது. பிஷ்னோய் 9 ரன்னில் வெளியேறினார். கடைசி கட்டத்தில் வாஷிங்டன் ஆவேஷ் கடுமையாக முயற்சிக்க இந்திய அணிக்கு சற்று நம்பிக்கை பிறந்தது. ஆவேஷ் 16, முகேஷ் (0) அடுத்தடுத்து ஆட்டமிழக்க, கடைசி 2 ஓவரில் 18 ரன் தேவைப்பட்ட நிலையில், முஸரபானி 19வது ஓவரில் 2 ரன் மட்டுமே விட்டுக்கொடுத்து நெருக்கடியை ஏற்படுத்தினார்.

இதனால் கடைசி ஓவரில் வெற்றிக்கு 16 ரன் தேவைப்பட, சதாரா பந்துவீச்சில் பவுண்டரி, சிக்சர் விளாச முடியாமல் சிரமப்பட்ட வாஷிங்டன் 27 ரன் எடுத்து (34 பந்து, 1 பவுண்டரி, 1 சிக்சர்) விக்கெட்டை இழந்தார். இந்தியா 19.5 ஓவரில் 102 ரன் மட்டுமே எடுத்து 13 ரன் வித்தியாசத்தில் அதிர்ச்சி தோல்வியைத் தழுவியது. கலீல் (0) ஆட்டமிழக்காமல் இருந்தார். ஜிம்பாப்வே பந்துவீச்சில் கேப்டன் சிக்கந்தர், சதாரா தலா 3, பென்னட், மசகட்சா, முஸரபானி, ஜாங்வே தலா 1 விக்கெட் வீழ்த்தினர். சிக்கந்தர் ஆட்ட நாயகன் விருது பெற்றார். ஜிம்பாப்வே 10 என முன்னிலை வகிக்க, 2வது போட்டி இன்று மாலை 4.30க்கு தொடங்கி நடைபெற உள்ளது.



அரும்பய னாயும் அறிவினார் சொல்லார்
பெரும்பய னில்லாத சொல்

விளக்கம்:
அருமையான பயன்களை ஆராயவல்ல அறிவை உடைய அறிஞர், மிக்க பயன் இல்லாத சொற்களை ஒருபோதும் சொல்லமாட்டார்.

## யுரோ கோப்பை கால்பந்து; ஸ்பெயின், பிரான்ஸ்: வெளியேறியது ஜெர்மனி, போர்ச்சுகல்




பெர்லின்: ஜெர்மனியின் பெர்லின் நகரில் யுரோ கோப்பை கால்பந்து போட்டியின் கடைசி காலிறுதியில் போர்ச்சுகல்பிரான்ஸ் அணிகள் மோதின.'இதுதான் எனக்கு கடைசி யுரோ கோப்பை' என நட்சத்திர ஆட்டக்காரர் கிறிஸ்டியனோ ரொனால்டோ கூறியிருந்தார். அதனால் அவரது போர்ச்சுகல் மீது பெரும் எதிர்பார்ப்பு இருந்தது. கூடவே முதல் ஆட்டத்தில் மூக்குடைந்தால் நட்சத்திர வீரர் கிளியன் எம்பாபே ஆட்டம் எடுபடுமா என்றும் பிரான்ஸ் ரசிகர்கள் சந்தேகத்தில் இருந்தனர்.

இந்த இரண்டுக்கும் பதிலளிக்கும் வகையில் ஆட்டமிருந்தது. ஆட்டத்தில் போர்ச்சுகல் ஆதிக்கம் செலுத்தினாலும், கோலடிக்கும் முயற்சியில் பிரான்ஸ் தான் முன்னிலையில் இருந்தது. எனினும் 2 அணிகளாலும் ஒரு கோல் கூட அடிக்க முடியாமல் திணறினர். முதல் 90 நிமிடங்களும் கோலின்றி சமனில் முடிய, கூடுதலாக 30 நிமிடங்கள் ஆட வாய்ப்பு வழங்கப்பட்டது. அதிலும் எந்த தரப்பும் கோலடிக்க முடியவில்லை. இப்படி 2 தரப்பிலும் 35 கோல் முயற்சிகள் வீணாகின. அதனால் முழு ஆட்டமும் 00 என கோலின்றி டிராவானது.

எனவே பெனால்டி ஷூட் அவுட் முறையில் வெற்றி, தோல்வி முடிவு செய்யப்பட்டது. ஒவ்வொரு அணிக்கும் வழங்கிய தலா 5 வாய்ப்புகளில் பிரான்ஸ் 53 என்ற கோல் கணக்கில் வெற்றிப் பெற்று கடைசி அணியாக அரையிறுதிக்கு முன்னேறியது. ரெனால்டோ உள்ளிட்ட போர்ச்சுகல் வீரர்கள் கண்ணீருடன் அரங்கில் இருந்து வெளியேறினர். முன்னதாக டுஸ்ஸல்டார்ப்பில் நடந்த ஸ்பெயின்ஜெர்மனி இடையிலான 3வது காலிறுதி ஆட்டம் 11 என்ற கோல் கணக்கில் டிராவானது. அதனால் அளிக்கப்பட்ட 30நிமிடங்கள் கூடுதல் நேரத்தில் மேலும் ஒரு கோலடித்த ஸ்பெயின் 21 என்ற கோல் கணக்கில் வென்று அரையிறுதிக்குள் நுழைந்தது. போட்டியை நடத்தும் ஜெர்மனி காலிறுதியுடன் விடைபெற்றது. ஜூலை 9ம் தேதி நள்ளிரவு நடைபெறும் முதல் அரையிறுதியில் ஸ்பெயின்பிரான்ஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்த உள்ளன.

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.